# இராமேஸ்வரத்தின் வரலாற்றுப்பின்னனி

வே.பரந்தாமன் மற்றும் அ.பிரேம் குமார்
ரீச் பவுண்டேஷன், சென்னை



இம்மாவட்டத்தில் பழைய கற்காலம் முதல் வரலாற்றுக்காலம் வரையிலான தொல்லியல் இடங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. குறிப்பாக சாயல்குடி, அழகன்குளம், பட்டனம் காத்தான், தேரிருவேலி, அறியாகுண்டு, பெரியபட்டிணம் போன்ற தொல்லியல் இடங்கள் மிக முக்கியமானவையாகும். இவற்றில் ஒரு சில சங்ககால ஊர்களென்று அகழாய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்டவைகளாகும். சாயல்குடியானது நுண்கற்காலத்தைச் சேர்ந்த தொல்லியல் இடமாகும். இராமேஸ்வரம் சங்ககாலம் முதல் வரலாற்றுக்காலம் வரை முற்கால மற்றும் பிற்கால பாண்டிய, சோழ, விஜயநகர நாயக்கர் மற்றும் சேதுபதிகள் ஆட்சியின் கீழ் இருந்த பகுதியாகும்

அவ்வாறு மிகச் சிறப்புவாய்ந்த தொல்லியல் வரலாற்று இடங்கள் மிகுதியாக உள்ள இம்மாவட்டத்தில், இராமேஸ்வரமும் ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது. வேதங்கள், புராணம் மற்றும் சங்கப் பாடல்களில் கூறப்படும் இடமாகவும், தொல்லியல் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடமாக இருந்தமைக்கு இப்பகுதியில் கிடைக்கக்கூடிய ஆதாரங்களை வைத்துக் குறிப்பிடலாம்.

இம்மாவட்டத்தில் உள்ள கல்வெட்டுக்களில் இப்பகுதியில் வடதலை செம்பி நாடு, கீழ்செம்பி நாடு, செவ்விருக்கை நாடு, கைக்கை நாடு, பொலியூர் நாடு, இடையள நாடு மற்றும் தழையூர் நாடு, கோடி நாடு போன்ற நாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. The antiquity of the Setu and that of Rama's adventure go together. The extract from the yajur Veda contemplates two vast seas that clash with each other "like the feet of a babe in the womb" and a Setu that bridges an ocean whose farther shore is invisible. But the passing is also interpreted in the light of some sacrificial ceremony and the arrangement of vessels and cups used there[1].

पाण्ड्य देशेति विमले स्थितं रामेश्वरं हरम्
दृष्ट्वा स्वर्गमवाप्नोति यदि स्यात्पापकृत्तमः *

**விஷ்ணு புராணம்**

இராமேஸ்வரத்தைப் பற்றி ரிக் வேதம், இராமாயணம், விஷ்ணு புரானம் போன்றவற்றில் கூறப்படுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பாடல் பெற்ற சைவ, வைணவக் கோயில்கள் உள்ளன அவற்றில் பாண்டிய நாட்டிலுள்ள 14 ஆவது சிவதலமாக இராமேஸ்வரம் உள்ளது. இக்கோயிலுக்கு சைவ நாயன்மார்களில் முதன்மையானவர்களான அப்பர், சம்பந்தர், ஆகியோர் இந்த ராமலிங்கேஸ்வரர்பால் பாடல்களை பாடியுள்ளனர். சங்க இலக்கியமான புறநானூற்றில் சீதாப் பிராட்டியைக் கவர்ந்த இராவணன் புட்பக விமானமூலம் இலங்கைக்குச் சென்றபொழுது, அலமருந்த பிராட்டியார் தான் அணிந்து இருந்த அணிமணிகளைக் கழற்றிக் கீழே விட்டெறிந்தவாறு சென்றார். இப்படிச் செய்தமை அவரைத் தேடி அலையும் இராமனது கண்களில் ஒரு வேளை அவை பட்டு அவள் சென்றுள்ள திக்கைத் தெரிவிக்க உதவும் என்ற நினைப்பில், ஆனால் அவைகளைக் கண்டெடுத்த வாணரங்கள் அவைகளைப் பொருத்தமற்ற முறையில் அணிந்து கொண்டன. இப்பாடல் பின்வருமாறு:

“கருந்தேரி ராமன் உடன் புணர் சீதை
வலித்தகை யரக்கன் வவ்விய நாள்
நிலம் சேர் மாதரணி கண்ட குரங்கின்
அறா அருநகை யின்று பெற்றிடுமே”.........(புறம்:378)

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது போல் மற்றுமொரு பாடலில் கடற்கரையை அடுத்த பரந்து விரிந்த ஆலமரத்தின் நிழலில், கடலைக்கடந்து இலங்கைக்குச் செல்வது பற்றி வானர வீரர்களுடன் ஆலோசனை ஒன்றில் ஈடுபட்டு இருந்தார். அதற்கு இடையூராக ஆலமரத்தில் இருந்த பறவைகளின் ஆரவார ஒலி அமைந்து இருந்தது. அந்த ஒலியை இராமபிரான் கையமர்த்தி அடங்கச் செய்ததாக இந்த அகநானூற்றுப் பாடலில் கூறப்பட்டுகின்றது.

“வெவ்வேல் கவுரிய தொல்முறு கோடி
முழங்கி வரும் பௌவம் இரங்கு மூன்று துறை
வெல் போரி ராமன் அருமறை அவித்த
பல் மூலம் போல”.............. .(அகம்:70)

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது போன்று இராமேஸ்வரம் இராமநாதசுவாமியின் மேல் பாடப்பெற்ற தேவாரப் பாடலில் “இராமேசுரம்” என்ற பெயர் வருவதைக்காணலாம்

தேவியை வவ்விய தென்னிலங்கைத்தச மாமுகன்
பூவியலும் முடி பொன்றுவித்த பழிபோயற
வேவியலுஞ்சிலை யண்ணல் செய்த விராமேச்சுரம்
மேவிய சிந்தையினூர் கடம்மேல் வினைவீடுமே

அனையிலைசூழ் கடலன்றடைத்துவழி செய்தவன்
பனையிலங்கும் முடிபத்திறுத்த பழிபோக்கிய
வினையிலியென்று மிருந்த கோயிலி ராமேச்சுரந்
துணையிலிதூ மலர்ப்பாதமேத்தத்துயர் நீங்குமே
- சம்பந்தர்

பலவுநான் தீமை செய்து பார்தன் மேற்குழுமி வந்து
தொலை விலார் கொடியராயவரக்கரைக் கொன்று வீழ்த்த
சிலையினான் செய்தகோயிற் திருவிராராமேச்சுவரத்தைத்
தலையினால் வணங்குவார் கடாழ் வரந்தவம் தாமே
- அப்பர்

இவ்வாறு தேவாரப்பாடலில் இராமேஸ்வரத்தைப் பற்றிக் கூறப்படுகின்றது.இராமேஸ்வரத்திற்கு அர்ஜுனன் வந்ததாக வில்லிபுத்தூராரின் பாரதம் (14 ஆம் நூற்றாண்டு) என்ற நூல் குறிப்பிடுகின்றது.

இம்மாவட்டத்தில் திருவாடனை சைவதலமாகவும், திருப்புல்லானி வைணவப் பாடல் பெற்ற ஸ்தலமாகவும் உள்ளன. பன்னிரு ஜோதிர்லிங்கத்தின் ஒன்றாக இக்கோயில் விளங்குகின்றது[2]. இராமேஸ்வரம் தீவு ஒரு வில்லின் வடிவத்தில் அமைந்திருக்கின்றது. இதை இராமபிரான் வில் என்பர். ஒவ்வொரு முனையும் அந்த வில்லின் கொடி என்பர்[3]. “to purify himself from the sin of Bhraminicide (Bhramhatya) committed by killing Ravana, who was the son of a Bhramin by a Rakshasa woman, Rama was adviced by Rishis to offer poojas, establishing a lingam. An auspiius moment was fixed for the purpose and Hanuman was sent to Mount Kailas to bring a lingam from there. The return of Hanuma was delayed. With a view not to miss the auspicious occasion, the linga, moulded by sita out of local sand, was established and poojas were performed by Rama. This linga is called Ramalinga, Ramanatha or Rameshvvarar. On account of this the island got the name of Rameshwaram. On his return from Kailas with two lingas, Hanuman found that all his labours has gone in vain and was very disappointed. Seeing the intensity of the disappointment of his most devout Bhaktha, sri Rama consoled him not to feel sad.one of the lingas brought by Hanuman was installed a little north and it was established that this Hanuman linga should have precedence over sri Ramanatha in all honours. This linga is variously called Viswanathar,Kasilingam, Hanumaligam and so on. It is now the practice for the pilgrm to offer his prayers to Sri visalakshi, Sri vishvanathar to then Sri Ramanathar and Parvathavarthini[4].

இராமநாத சுவாமி கோயிலானது இப்பகுதியில் மிகப்பெரியதாகவும் கடலுக்கருகாமையில் 15.5 ஏக்கர் பாப்பளவில் உள்ளது. இக்கோயிலின் சுற்றுச்சுவர் கிழக்கு மேற்க்காக 865 அடி நீளமாகவும், வடக்கு தெற்காக 657 அடி அகலமாகவும் உள்ளது. இங்குள்ள நந்தி 17 அடி உயரம், 22 அடி நீளம், 12 அடி அகலமான அளவுடைய மிகப்பெரியதாக உள்ளது. It is that until twelfth century, the deity was housed in a thatched shed under the charge of sanyasis. It is remarkable that such a simple shrine should have been a great center of pilgrimage in olden time in spite of transport and communication difficulties. The present temple is impressive and is in the Dravidian style. The first masonry structure around the inner shrine was built by prakramabahu, king of cylon in 1173 C.E. In some parts of the temple the original soft sands stone has been replaced by granite. A statement showing the details of renovation made by sethupathi Rajas of Ramanathapuram and others is given below[5].

இராமநதபுரம் மாவட்டம் பெரியப்பட்டினத்தில் கிராமத்தில் நிகழ்த்திய அகழ்வுகளில் "ராஜராஜ சோழன்" "சுங்கம் தவிர்த்த சோழன்" ஆகியவர்களது செப்புக்காசுகள் கிடைத்துள்ளன. இவை இந்த மாவட்டத்தில் சோழர்களது வலுவான ஆட்சி நடைபெற்றதற்கு வரலாற்றுச் சான்றுகளாக உள்ளன[6].

சோழர்கால ஆட்சியின் விளைவாக எழுந்த சிற்றூர்கள் சோழர்கள் பெயரால் நிலைபெற்று இன்றும் வழக்கில் இருந்து வருகின்றது. குறிப்பாக, சோழந்தூர், சோழியகுடி (திருவாடனை வட்டம்), சோழன்குளம் (இராமேஸ்வரம் வட்டம்) போன்ற ஊர்களாகும். மேலும் இப்பகுதியில் உள்ள தேவிப்பட்டினம் ராஜராஜ சோழனது இல்லக் கிழத்தியான லோகமாதேவியின் நினைவாக அமைக்கப்பட்டதாகும். மேலும் சோழர்களது வெற்றி பெயர்களான கங்கை கொண்டான், கிடாரம் கொண்டான், கோதண்டராமர் பட்டணம், செம்பியன் குடி ஆகிய ஊர்கள் உள்ளன[7]. ஆகையால் இராமேஸ்வரத்தில் கிடைக்ககூடிய தரவுகளின்படி வரலாற்றுக் காலத்தில் முற்காலப் பாண்டியர்கள் முதல் பிற்காலச் சோழர் காலம் வரையிலும், மேலும் இலங்கை மன்னர்களின் கல்வெட்டுக்களும் கிடைக்கின்றன.

எனவே இராமநாதபுரம் மாவட்டம் மூன்றுபக்கம் கடலாகவும் ஒரு பக்கம் நிலமாகவும் உள்ளது. மிகப் பழம்பெரும் வரலாற்றைத் தாங்கி நிற்கின்றன இம்மாவட்டம் கற்காலம் தொட்டு இடைக்காலம் வரையிலான தொல்லியல் சான்றுகள் அதிகமாக கிடைத்துள்ளன. குறிப்பாக இராமேஸ்வரத்தில் மிக அதிகமாக தொல்லியல் சான்றுகள், வேதங்கள், புராணங்கள், இலக்கியம் மற்றும் கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன. இராமேஸ்வரம் பகுதியில் காணப்படும் தொல்லியல் இடங்கள், இலக்கிய ஆதாரங்கள், கோயில்கள், கல்வெட்டுகள் போன்றவற்றை வைத்து இப்பகுதியின் முழுமையான வரலாற்றை வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். இராமேஸ்வரம் தீவில் அதாவது பாம்பன், தங்கச்சிமடம், தனுஷ்கோடி மற்றும் இராமேஸ்வரம் ஆகிய ஊர்களை உள்ளடக்கிய பகுதியில் இராமநாதசுவாமி கோயில் மட்டுமே மிக முக்கியமான வரலாற்றுக்கால நினைவுச் சின்னமாகும். மற்ற ஊர்களில் காணப்படும் கோயில்கள் விஜயநகர நாயக்கர்கள் மற்றும் சேதுபதி காலத்தில் கட்டப்பட்ட கோயில்களாகும்.

இராமேஸ்வரம் தீவின் வரலாறானது மிகத் திறம்பட சொல்லுவதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. ஏனென்றால் பாண்டியர்களின் கட்டுப்பாட்டில் இருந்த நாடானாலும் அவ்வப்போது அண்டை நாட்டு படையெடுப்புகளால் மாறி மாறி இருந்துள்ளது. ஏனென்றால் சங்ககாலம் தொட்டு ஒரு வணிக இடமாகவும் புனிதத்தலமாகவும், அனைவரும் வந்து செல்லும் பொது இடமாக இருந்துள்ளது. இச்செயல்பாட்டை இன்றும் நாம் காணலாம். இப்பகுதியை பாண்டியர்கள், சோழர்கள், சிங்களர்கள், விஜயநகர மன்னர்கள் மற்றும் சேதுபதிகள் போன்றவர்களால் ஆளப்பட்டுள்ளது. அவர்களின் சுவடுகள் இங்கு கல்வெட்டுக்களாகவும், கட்டிடக்கலைகளாகவும் காட்சியளிக்கின்றது. இராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணன் கி.பி. 910-ல் சோழர்களையும், பின்னர் பாண்டியர்களையும் கைப்பற்றி சிலகாலம் இராமேஸ்வரத்தில் தங்கியிருந்தான். அப்போது அங்கு சேது மூலத்தில் தனது வெற்றியை குறிக்கும் வகையில் ஜெயஸ்தம்பம் ஒன்றை நிர்மானித்தான் என்று அவனது ஹோல்காப்பூர் செப்பேடு குறித்துள்ளது[8].

அதுபோல மதுரையை பாண்டியர்களிடமிருந்து கி.பி. 10 நூற்றாண்டில் பராந்தகச்சோழன் இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு துலாபாரம் நிகழ்த்தி அவனது நிறைக்குரிய பொன்னைக் கோயிலுக்கும், அந்தணர்களுக்கும் பகிர்ந்தளித்தான் என்பது அவனது கி.பி.932 ஆம் ஆண்டில் வெளியிட்ட வேளச்சேரி செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மலைமண்டலத்தைச் சேர்ந்த வீரநாராயணன் என்ற அந்தணன் கோடி நாட்டு இராமேஸ்வரத்தில் நடத்திய சுந்தரபாண்டிய மடத்திற்கு அக்கிரமேசி சதுர்வேதிமங்களத்தில் 12 வேலி விளைநிலத்தைத் தானமாகப் பெற்றதாகும். ஆனால் இந்த செய்திக்கு முன்னதாக தமிழக வரலாறும் இலங்கை நாட்டு வரலாறும் ஒரு சேர உறுதி செய்கின்ற நிகழ்ச்சி ஒன்று உள்ளது[9].

இலங்கையில் பராக்கிரமபாகுவை அடுத்து கி.பி.1187ல் அறியனை ஏரிய நிஸங்க மன்னன் சேனைகள் தமிழ்நாட்டில் நிர்மானித்து இராமேஸ்வரத்தில் தங்கி இருந்தார். அப்போது அவர் நிஸ்ஸங்கேஸ்வரருக்கு ஒரு கோயில் எடுப்பித்ததாக இராமேஸ்வரம் கோயிலில் கொடிக்கம்பம் அருகில் உள்ள பாலி மொழிக் கல்வெட்டும், இலங்கை தம்போலா என்ற இடத்தில் உள்ள பாலி மொழிக் கல்வெட்டும் உறுதி செய்கின்றன. கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் நிலவிய அரசியல் பூசல்கள் பாண்டிய அரசின் அரசுக்கட்டிலுக்கு ஏற்பட்ட போட்டி ஆகியவைகளினால் கி.பி. 1169-ல் இலங்கைப் படைகள் முதன்முதலாக இராமேஸ்வரம் தீவில் கரை இறங்கின. தொடர்ந்து மேற்கேயும், வடகிழக்கேயும் நடைபெற்ற பல போர்களில் பாண்டியரது இளவல் வீரபாண்டியனுக்காக போரிட்டார். இந்தப்படைகள் சோழ நாட்டின் தென் பகுதியான பொன்னமராவதிவரையும், பாண்டிய நாட்டின் தென் பகுதியான எதிர்கோட்டை வரையிலும் பரவி நின்ற வரலாற்றை மகாவம்சம் என்ற இலங்கை வரலாற்று நூல் விவரிக்கின்றது. சுருக்கமாகச் சொல்லப் போனால் இராமேஸ்வரம் தீவு முழுவதும் பொ.ஆ. 1169 முதல் பொ.ஆ.. 1189 வரை இலங்கை மன்னரது ஆக்கிரமிப்பில் இருந்து வந்தது[10]. பொ.ஆ.1169ல் மதுரையைக் கைப்பற்றிப் பாண்டியப் பேரரசனாவதற்கு குலசேகரன் முயன்றான்.

இது அறிந்த மதுரை மன்னன் பராக்கிரம பாண்டியன் இலங்கை மன்னன் பராக்கிரமபாகுவிடம் உதவி கோரினான். இலங்கை உதவி கிடைப்பதற்கு முன்னர் குலசேகரன் பராக்கிரம பாண்டியனைக் கொன்று மதுரைக்கு அதிபதியானான். அத்துடன் பராக்கிரமனது மகன் வீரபாண்டியனுக்கு உதவ வருகின்ற இலங்கைப் படைகளை எதிர்கொண்டு போரிடுவதற்கு இராமேஸ்வரம் தீவிலும் கிழக்குக் கடற்கரையிலும் தக்க முன் நடவடிக்கைகள் எடுத்தான். இதன் பிறகு பொ.ஆ. 1169 ல் இளவேனில் காலத்தில் இலங்கை மன்னர் பராக்கிரமபாகுவின் பெரும்படை நூற்றுக்கணக்கான படகுகளில் இராமேஸ்வரம் தீவில் வடபகுதியில் கரை இறங்கின. இலங்காபுர தண்ட நாயகன் என்ற தளபதியின் தலைமையில் குலசேகர பாண்டியனது எதிர்ப்புகளை நிர்மூலமாக்கிவிட்டு இலங்கைப்படைகள் முன்னேறி இராமேஸ்வரத்தையும் பின்னர் பாம்பனையடுத்த குந்துக்காலையும் கைப்பற்றின. பின்னர் வடலி (வேதாளை), எழுகோட்டை, இடகழிசாரம், பராக்கிரபட்டிணம் என்று இராமேஸ்வரம் தீவின் மேற்குக் கரையையடுத்த கடல் துறைகளிலும் பாண்டியனது போர்படைகள் படுதோல்வியடைந்தன. பின்னர் பொ.ஆ. 1195 வரை இலங்கையின் கட்டுப்பாட்டில் இருந்தன[11].

இதன் பிறகு இராமேஸ்வரம் பாண்டியர்களின் வாரீசுரிமைப் போட்டியின் போது டெல்லி சுல்தான் அலவுதீன் கில்ஜியின் படைத்தளபதியான மாலிக்காபூர் கர்னாடாகாவில் தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தான். வீரபாண்டியனுக்கும் சுந்தரபாண்டியனுக்கும் ஏற்பட்ட சண்டையினால் சுந்தரபாண்டியன் (பொ.ஆ.1311) மாலிக்கபூரிடம் உதவியை நாடுகின்றான். மதுரைக்கு வந்தவன் சுந்தரபாண்டின் அறியனை ஏரிய பின் இராமேஸ்வரம் வந்து இராமநாத கோயிலில் இருந்த விலை மதிக்கத்தக்க அணிமணிகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளான். ஆனால் வரலாற்றாசிரியர் திரு.எஸ். வெங்கட்டராமணய்யா பொ.ஆ.1311ல் மாலிக்காபூர் மதுரை வருகைக்குப் பின் இராமேஸ்வரம் செல்லவில்லை என்கிறார்[12]. இதன்பிறகு தமிழகத்தில் விஜயநகர நாயக்கர்களின் ஆட்சி வந்தவுடன் இராமேஸ்வரத்தில் நாயக்க மன்னர்களின் பங்களிப்புகளும் கொடைகளும் வரலாயின.

முதன் முதலில் இங்கு ஹரிஹரரின் (பொ.ஆ.1377-1404) தென்னாட்டு ஆளுநரான முதலாவது விருபாசா இராமேஸ்வரம் வந்தார். இராமநாதசுவாமி திருமுன்னர் துலாபாரம் நிகழ்த்திப் பொன்னை ஈந்தார். இவரையடுத்து விஜயநகர ஆளுநர் கோப்பதிப்பா என்பவர் பொ.ஆ.1408-ல் இராமேஸ்வரம், திருக்கோயிலுக்கு யாத்திரையாக வந்து பதினாறு தர்மங்களையும் செய்தார். பொ.ஆ. 1517-ல் பேரரசர் கிருஷ்ணதேவராயர் இராமேஸ்வரம் தலயாத்திரை மேற்க்கொண்டு இராமசேதுவில் மூன்று நாள்கள் தங்கியிருந்து முப்பத்து இரணு அறங்களையும் தமது இரு துணைவியாருடன் நிறைவேற்றி மகிழ்ந்தார். இதனைத் தொடர்ந்து பொ.ஆ. 1659-ல் தஞ்சாவூர் மன்னர் விஜயரெகுநாத நாயக்கர் இராமேஸ்வரத்தில் ஹிரண்ய கர்ப்பம், துலாபாரம் ஆகிய தர்மங்களை செய்துள்ளனர். இவ்வாறு ஒவ்வொரு அரசர்களும் தங்களின் பங்களிப்பை செய்துள்ளனர்[13].

1.Vanamamalai pillai,N, The setu and Rameshwaram,1929, p-12

2.censuses of india, 1961 Vol.ix,Temples od madras state Madurai &Ramanathapuaram,P.K.kannaia,p-1

3.தமிழ்நாட்டு விவரச்சுவடி, இராமநாதபுரம் 1990, சோமலெ, ப-1118

4.censuses of india, 1961 Vol.ix,Temples od madras state Madurai & Ramanathapuaram, P.K.kannaia,p-307

5.censuses of india, 1961 Vol.ix,Temples od madras state Madurai & Ramanathapuaram, P.K.kannaia,p-307

6.இராமநாதபுர மாவட்டம், எஸ்.எம்.கமால், பக்-9-10

7.இராமநாதபுர மாவட்டம், எஸ்.எம்.கமால், ப-10

8.எஸ்.எம். கமால், 2004, இராமன் செய்த கோயில், சர்மிளா பதிப்பகம், இராமநாதபுரம்,பக்-40-41).

9.எஸ்.எம். கமால், 2004, இராமன் செய்த கோயில், சர்மிளா பதிப்பகம், இராமநாதபுரம்,பக்-39-40).

10.எஸ்.எம். கமால், 2004, இராமன் செய்த கோயில், சர்மிளா பதிப்பகம், இராமநாதபுரம்,ப-65

11.எஸ்.எம். கமால், 2004, இராமன் செய்த கோயில், சர்மிளா பதிப்பகம், இராமநாதபுரம்,பக்-39-40

12.எஸ்.எம். கமால், 2004, இராமன் செய்த கோயில், சர்மிளா பதிப்பகம், இராமநாதபுரம்,ப-41

13.எஸ்.எம். கமால், 2004, இராமன் செய்த கோயில், சர்மிளா பதிப்பகம், இராமநாதபுரம்,ப-42-4